## 8. திருப்பரங்கிரி.

***பண் - பஞ்சமம்.***

**எ**ந்தையே யிறையே யிணையரு ளிலையே
லிங்கியா னுய்ந்திலே னந்தோ
சிந்தைசேர் வானே திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
பந்தமே போக்கிப் பதவரு ளாக்கிப்
பகலிர வணவிடா நிலையிற்
சந்ததஞ் சேர்க்கத் தயவுசெய் யாயோ
சரவண சுயம்பெரு மாளே. 1

---

*9.* ***கெம்புதல்*** = *கிளர்தல். இஃதொரு நாட்டுச் சொல்லாகலாம்.*

**ஏ**சுறா வருளா மிதநல மிலையே
லிங்கியா னுய்ந்திலே னந்தோ
தேசுசே ரெழிலே திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
பாசமே போக்கிப் பதவரு ளாக்கிப்
பரபரி பூரண நிலையில்
நேசமாய் நிலைக்கச் செயும்வகை புரியாய்
நிகழயிற் சுயம்பெரு மாளே. 2

**இ**ன்றுநா ளையெனலி லாவரு ளிலையே
லிங்கியா னுய்ந்திலே னந்தோ
சென்றுதே யாவை திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
அன்றுநீ சொனவா றடிமையை யழைத்துன்
னடித்தொழும் பாயுறும் வேலை
ஒன்றையே விதிப்பா யயிற்படை பிடித்தே
யொளிர்சுப சுயம்பெரு மாளே. 3

**எ**ங்கணா யகநீ யிடுமரு ளிலையே
லிங்கியா னுய்ந்திலே னந்தோ
திங்களா னனனே திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
கங்குல்போ லுளவா ணவமல மறவே
கருணைசெய் தேயெனை யாளாய்
அங்கணா புரணா வணியலர்ச் சரணா
வயிலுடைச் சுயம்பெரு மாளே. 4

**இ**சையியல் கூத்தென் றுளதமிழ் நாதா
விங்கியா னுய்ந்திலே னந்தோ
திசைபுக ழாதீ திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
வசைதரு மாமும் மலமற நீதான்
வருவது கடினமெ னாதே
உசிதமொ டுதடுத் தாள்வது கடன்கா
ணுயரயிற் சுயம்பெரு மாளே. 5

**இ**ச்சையான் மறற்கே யடிமையென் றானா
லிங்கியா னுய்ந்திலே னந்தோ
செச்சைசேர் பிணையாய் திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
பட்சமே யுரித்தாய்ப் பழமல மகற்றிப்
பகரரு மானந்த நிலையில்
நிச்சயா திக்கமா நிறுத்தவா ராயோ
நெடுமயிற் சுயம்பெரு மாளே. 6

**எ**ன்னையாள் வானே யேரரு ளிலையே
லிங்கியா னுய்ந்திலே னந்தோ
தென்னர்மா கூற்றே திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
இன்னலா மைவகைப் பாசவல் லொழித்துன்
னிணையடி யென்முடி சூட்டி
நல்னலங் கொளற்குப் பன்னவா ராயோ
நறுமயிற் சுயம்பெரு மாளே. 7

**எ**ம்பிரா னேயுன் னன்பனாக் காயே
லிங்கியா னுய்ந்திலே னந்தோ
செம்பொருட் கடலே திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
நம்பினே னுனையே நைந்தறா மாயை
நலிவுறத் தடுத்தா ளாயோ
உம்பர்கா வலனே யுமையவள் சுதனே
யுணர்வயிற் சுயம்பெரு மாளே. 8

**இ**ஞ்சையா ணவப்பாம் பின்னமுங் கறிக்கி
னிங்கியா னுய்ந்திலே னந்தோ
செஞ்சடா னனனே திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே

---

*6. **மறல்** = பிணக்கு, யமன்.*

*7. **தெறுநர்** என்பது "தென்னர்" என மருவிற்று. பகைவரென்பது பொருள்.*

அஞ்சிடா யெனவே யாதரித் தணைத்துன்
　　னடித்தொழும் பாக்கவா ராயோ
மஞ்சுவாழ் கயப்பெண் மயன்மண வாளா
　　வடிவயிற் சுயம்பெரு மாளே. 9

இட்டமா மருடா னில்லையே யாயி
　　னிங்கியா னுய்ந்திலே னந்தோ
சிட்டர்பா லனனே திகழ்விழுப் பொருளே
　　திருப்பரங் கிரியுறை சிவனே
கட்டுமா ணவமாங் கயிற்றினை யறுத்தென்
　　கவலையின் றிறங்கடி யாயோ
மட்டிலா வகுப்பை யுரைத்தவ னிறைவா
　　மதியயிற் சுயம்பெரு மாளே. 10

நந்தன வருடம் பங்குனி மாதம் 16ஆம் தேதி சோமவாரம்.